**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.917/2025**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிச்சாமி(PW3) | | |
| Father's Name | தேவராஜ் | Calling | |
| Village | அவிநாசி | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of March 2026** by Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2025 ஆம் தேதி தலைமை காவலர் மோகன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது ஆதிஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.498/2025 சட்டப்பிரிவு 140(3),308(4) BNS ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வைத்திருந்தார்.**புகார் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சித்திரைவேல், பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் குகன், புண்ணியமுருகன் ஆகியோர் முன்னிலையில் எதிரி சிவகார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர்படுத்திய TN 39 BU 6213 Alto K10 காரையும் கத்தி ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **(அ.சா.ஆ.6)** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **(அ.சா.ஆ.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி லிங்கேஸ்வரனிடம் இருந்து சுமார் 20 கிராம் எடையுள்ள தங்க செயினை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **(அ.சா.ஆ.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **(அ.சா.ஆ.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் புலன் விசாரணையை முடித்து 1.11.2025 ஆம்தேதி சட்டப்பிரிவுகள் 140(3),308(4) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக நான் தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் தவறான பார்வை மகஜரை தக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வளத்திற்கும் எழுத சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை.:-**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |